முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1322

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.05.2023, சனிக்கிழமை

1. கலியிடர் போக்க வந்த
   கலியுக ஞானியே அரங்கா
   அழியாமை மக்களுக்கு தர வந்த
   ஆறுமுகன் என் அவதாரமே தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 30 ம் நாள், 13.05.2023, சனிக்கிழமை)
   ஆசிதந்து நித்தம் உன்னுள்ளே
   ஆறுமுகன் யான் ஐக்கியம் ஆகி உள்ளேன்
3. உள்ளபடி உன் ஆற்றல் அனைத்தையும்
   உலகத்தில் சக்தியாக்கி மக்களுக்கு
   வல்லமைபட தீட்சையாக வெளிவருகின்றேன்
   வணங்கும் மக்களை எல்லாம் உன் கரம்பட காக்கின்றேன்
4. காக்கவே உன் வழி இந்த கலியுகத்தில்
   கட்டளையாகவே தர்மத்தை அரங்கேற்றி
   தேக்கமின்றி உலகைமாற்றும்
   திடமான தர்மவழியை செய்துள்ளேன்
5. உள்ளபடி இந்த மார்க்கம் உலகம் தனை
   ஆளுமை கொண்டால் போதும்
   வல்லமைபட ஞான ஆட்சிக்காலம்
   வணங்குகின்ற மக்களுக்கு பாதுகாப்புமிக்க ஞானச்சித்தர் காலமாக
6. ஆகவே மாற்றம் நடக்கும்
   அரங்கன் தொண்டர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கும்
   அன்னதனால் அரங்கன் தொடர்புகூட்டி அகிலத்தார் ஞானம்
   பகிர்வுகொண்டால் போதும்
   வரமாக உலகமெங்கும் மாற்றம் வல்லமைபட என் சக்தியால் இனிதே நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—